செய்தி வெளியீடு எண் 03 நாள் 02.01.2017

# தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தன்னார்வ தொழில் ஆலோசகர்கள் (Business Mentor) பதிவு செய்ய அழைப்பு

~~~~~

சென்னை கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (www.editn.in) தமிழக அரசின் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு உதவும் வகையில், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தை (NEEDS) மாண்புமிகு தமிழக முதல்வர் 2013-14 ஆம் ஆண்டு அறிவித்தார். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2606 தொழில் முனைவோர் பயனடைந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான தொழில்கள் வளர்வதற்கு பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்க திட்டம் (PMEGP) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டம் (UYEGP) போன்ற திட்டங்கள் துணை புரிகின்றன.

தொழிலை துவங்கியபின் அதனை வெற்றிகரமாக நடத்தவும் மேம்படுத்தவும் நினைக்கும் தொழில்முனைவோருக்கு அத்தொழில் சார்ந்த வர்த்தக நுணுக்கங்கள் குறித்த ஆலோசனைகள் தேவைப்படுகிறது. அனுபவம் வாய்ந்த தொழில் முனைவோர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுனர்கள் ஆகியோருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வது அவசியமாகும். இதனை கருத்தில் கொண்டு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்(EDI) பாரத் யுவ சக்தி டிரஸ்ட்(BYST) என்ற அமைப்புடன் இணைந்து சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளுர் மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில் ஆலோசகர்கள் (Business Mentor) உதவியுடன் ஆலோசனை வழங்கிவருகிறது.

தமிழக அரசு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் புதிய தொழில் முனைவோர்கள் நலனை கருத்தில் கொண்டு தொழில் ஆலோசகர்களை பதிவு செய்து ஒருங்கிணைக்க உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. துவக்க நிலையில் உள்ள தொழில் முனைவோர்களை வெற்றி பெறச் செய்ய அனுபவமிக்க தொழில்முனைவோர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், வங்கிகள், தொழில் துறையில் உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது தற்போது பணியாற்றும் மேலாளர்கள், நிதி, விற்பனை, தொழில் நுட்பம், சந்தை படுத்துதல் பற்றி அனுபவம் வாய்ந்தவர்கள், விடுமுறை நாட்களில் சில மணி நேரங்களை ஒதுக்க முன்வருவோரை தொழில் ஆலோசகர்களாக (Business Mentor) சேவை அளிக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு தொழில் ஆலோசகர்களாக (Business Mentor) சேவையாற்ற விருப்பம் உள்ள மேற்சொன்ன தகுதியுடைய தன்னார்வலர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவு செய்துக்கொள்ள அழைப்பதோடு, அதன் பின் அரை நாள் பயிற்சி வகுப்பில் கலந்துக்கொள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் அழைக்கும். இத்தொழில் ஆலோசகர்கள் தன்னார்வலர்களாக முன் வருவதால் ஊதியம் ஏதும் கிடையாது.

தன்னார்வ தொழில் ஆலோசகர்கள் இளைய தொழில் முனைவோர்களை மேம்பாடு அடைய செய்வதையே குறிக்கோளாக கொள்பவர்களாகவும் பொறுமையுடன் தங்கள் அனுபவங்களையும் ஆலோசனைகளை பகிர்ந்து கொள்ளுபவராகவும் இருக்க வேண்டும். புதிய தொழில் முனைவோரின் தொழில் வளாகத்திற்கு நேரடியாக சென்றோ, தொலைபேசி மூலமாகவோ, மின் அஞ்சல் முறையிலோ, நேரில் வரவழைத்தோ உரிய ஆலோசனைகள் வழங்கலாம்.

மேற்படி தொழில் ஆலோசகராக விரும்பும் தொழில் வல்லுனர்கள் இந்த பூர்வாங்க பணியில் தங்களை இணைத்துக்கொள்ள மற்றும் முழுமையான விவரங்கள், பதிவுசெய்யும் முறை பற்றிய தகவல்கள் www.editn.in/pages/view/mentoring என்ற இணையதள பக்கத்தில் தெரிந்துகொள்ளலாம். இது குறித்து கூடுதல் விபரங்கள் பெற mentor@editn.in என்ற மின்அஞ்சல் மூலமாகவோ அல்லது தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் தொலைபேசி எண்கள் 044-22252081 மற்றும் 044-22252082 மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~